பக்கங்கள் -18

# காலை முரசு

## நீர்க் கட்டணத்துக்கு விரைவில் வருகின்றது விலைச்சூத்திரம்

### இராஜாங்க அமைச்சர் தகவல்




நீர்க் கட்டணத்துக்கு விலைச்சூத்திரமொன்றை அறிமுகம் செய்ய 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 20 வியாழக்கிழமை 07.12.2023 அதிர்வு 128



# புலிகளை மீளுருவாக்கம் செய்யவும் மாட்டேன்!

# ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவும் மாட்டேன்!!



## விமர்சனங்களுக்கு ஜனாதிபதி பதிலடி



"விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. அதேவேளை, ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் எனக்கு இல்லை."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாவீரர் தின நிகழ்வு தொடர்பிலும், நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து ராஜபக்ஷ தரப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எதிராக எதிரணியினர் முன்வைத்து வரும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04▶

### உறவுகளை நினைவேந்துபவர்களைத் தடுக்க முடியாது

# புலிச் சின்னங்களை பயன்படுத்துபவர்கள் சிறைக்கே செல்வர்



### நீதி அமைச்சர் தெரிவிப்பு

"விடுதலைப் புலிகளின் சின்னங்களைப் பயன்படுத்துபவர்கள், புலிகள் மாதிரிக் காட்சியளிப்பவர்கள், 04▶




தென்னிலங்கையில் இருந்து பேரின ஊடக நண்பர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். நீண்ட கால நல்ல நண்பர். பல விடயங்களை அவ்வப்போது மனம் விட்டுப் பேசுவார். எனினும், அன்று என் தொடர்பில் புதிய விடயம் ஒன்றைக் கண்டுபிடித்தவர் போல பேசினார். 04▶




# சர்வதேச மனக் கணிதப் போட்டியில் யாழ். மாணவன் ருஷாந் முதலிடம்!

(எஸ்.நிதர்ஷன்)

**மலேசியாவில் நடைபெற்ற 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றிய சர்வதேச மனக் கணிதப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ருஷாந் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.**

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் இயங்கும் UCMAS கிளையில் பயிலும் இவர், இலங்கை சார்பில் கலந்து கொண்டு Champion பட்டத்தை பெற்ற ஒரே ஒருவர் என்பது பாராட்டுக்குரியது.

2023ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் சர்வதேச மனக் கணிதப் போட்டி இடம்பெற்றது. இந்தப் போட்டியில் உலகளாவிய ரீதியிலே 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேந்த 2 ஆயிரத்து 500 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 62 மாணவர்கள் இதில் பங்குபற்றினர். இதில் கிருபாகரன் தர்சானந், செந்தில்நாதன் சேசாளன், கஜேந்திரன் லவின், வானதி சிவநேசன் ஆகியோர் தத்தமது பிரிவுகளில் சர்வதேச ரீதியாக மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டனர்.



# இராணுவச் சிப்பாய்க்கு மரண தண்டனை!

## மன்னார் மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

**(மன்னார் நிருபர்)**

இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு மன்னார் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

மன்னார் – பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டின் போது, கடமையில் இருந்த இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பான விசாரணைகள் மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில், நேற்று அந்த இராணுவச் சிப்பாய்க்கு மரண தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிகால் தீர்ப்பளித்துள்ளார்.

முருங்கன் பொலிஸாரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது, குற்றவாளியைக் போகம்பரை சிறைச்சாலைக்கு அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்திய இராணுவ ஆலோசகருடன் இலங்கை இராணுவத் தளபதி பேச்சு

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளரும் இராணுவ ஆலோசகருமான எயார் மார்ஷல் சந்தீப் சிங்கைச் சந்தித்துள்ளார்.

இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு, முப்படைகளுக்கு இடையிலான பயிற்சி தொகுதிகளை மேம்படுத்துதல், புதிய தொழில்நுட்பம், ஆயுதப் படைகளின் நவீன மயமாக்கல் மற்றும் கூட்டுப் பயிற்சிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்திய இராணுவத் தளபதியின் அழைப்பை ஏற்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# நீதி அமைச்சர் விஜயதாஸ பதவி விலக வேண்டும்!

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி. ஆவேசம்



**(எஸ்.நிதர்ஷன், கி.வசந்தரூபன்)**

**நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஸபக்ஷ கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும் வகையில் நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 4 ஆம் திகதி வரவு – செலவுத் திட்டத்தின் நீதி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நான் கலந்து கொண்டு உரையாற்றிய விடயங்கள் தொடர்பாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றில் அறிக்கையிட்டிருந்தார். அவரது பேச்சில் குறிப்பாக என்னை ஒரு இனவாதியாகவும், எனது தந்தையை ஒரு முற்போக்குவாதியாகவும், இந்தச் சபையின் முன்னாள் உறுப்பினராக இருந்த எனது பாட்டனாரை ஒரு இனவாதியாகவும் சித்தரித்திருந்தார். அதில் என்னுடைய பாட்டனார் கம்பொலயில் ஆற்றிய உரையில் சிங்கள மக்களை அவமதித்தும், அவர்களைக் கீழ்த்தரமாகவும் கூறியதாகவும் கூறி அவரை ஒரு இனவாதியாகக் காட்டிக் கொள்வதற்காக தனது கருத்தை முன்வைத்திருந்தார்.

40 வருட அவருடைய அரசியல் வரலாற்றிலே ஒரே சம்பவத்தை மட்டுமே குறிப்பிட்டு அவரை ஒரு இனவாதியாக காட்ட நீதி அமைச்சர் முயன்றிருக்கின்றார். எந்தளவு தூரத்துக்கு அவர் கூறிய கருத்து உண்மையாக இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. அதே போன்று சிங்களவர்களுக்கு எதிரான இனவாதத்தை ஒரு பக்கம் காட்டிக் கொண்டு, இந்திய இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு 6 இலட்சத்து 90 ஆயிரம் மலையக மக்களுடைய பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கு அமைச்சுப் பதவியைப் பெற்று ஆதரவளிக்கத் தயங்காதவராகவும், தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தவராகவும்தான் ஜி.ஜி.பொன்னம்பலம் இருந்தவர் என்றும், அவருடைய பேரானாக அவரைப் போலவே இனவாதத்தைக் கக்குகின்ற ஒருவராக நான் இருக்கின்றேன் என்றும் நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஒரு நீதி அமைச்சராக விஜயதாஸ ராஜபக்ஷ என்னுடைய பாட்டனார் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற நிலையில் – சட்டத்தை விளங்கிக் கொண்டும் சரியான தகவல்களோடு முன்வைக்க முடியாமல் தத்தளிக்கின்றார்.

மலையக மக்களுடைய பிரஜாவுரிமையைப் பறித்த சட்டம் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் 1948ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கச் சட்டம். அந்தச் சட்டம் மலையக மக்களுடைய பிரஜாவுரிமையை எப்படிப் பறித்ததென்றால் – இரண்டு சந்ததிகளுக்குப் பின்னுக்குச் சென்று அவர்கள் நிரந்தரமாக இந்தத் தீவிலே வாழ்ந்ததாக நிரூபிக்க வேண்டியதொரு நிபந்தனையை இட்டதால் – மலையக மக்களுக்கு அதனை உறுதிப்படுத்த முடியாமல் இருந்த காரணத்தால் அவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

அந்த இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் 1948ஆம் ஆண்டு 18 ஆவது சட்டத்தை தமிழ்க் காங்கிரஸ் முற்றாக எதிர்த்திருந்தது. ஜி.ஜி.பொன்னம்பலமும் அதை எதிர்த்திருந்தார். இதை நிரூபிப்பதற்காக இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய வெள்ளி மலரின் கட்டுரை ஒன்றின் ஊடாக நிரூபிக்க விரும்புகின்றேன். அந்தக் கட்டுரையை ஜி.ஜி.பொன்னம்பலத்தின்பரமவிரோதியாகஅன்றுஅரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராகவும் இந்தச் சபையில் செயற்பட்டிருந்த அமிர்தலிங்கமே எழுதியிருந்தார். அந்த ஆவணத்தை இங்கே பதிவு செய்வதோடு, அதனை ஆவணப்படுத்துவதற்கும் இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

அதில் "தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேருவதற்கு முன்பே டி.எஸ். சேனனாயக்க அரசாங்கம் இலங்கை பிரஜாவுரிமைச்சட்டத்தைநிறைவேற்றிவிட்டது.தமிழ்க்காங்கிரஸ்சார்பில்ஜி.ஜி.பொன்னம்பலமும் சா.ஜே.வே. செல்வநாயகமும் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜி.ஜி பொன்னம்பலத்தின் பரம விரோதியாகச் செயற்பட்ட ஒருவரே இதை எழுதியுள்ளார். இலங்கை பிரஜாவுரிமையைப் பறித்த சட்டத்தை ஜி.ஜி.பொன்னம்பலம் எதிர்த்தார் என்பதை அதில் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் நிலை இவ்வாறிருக்க, ஒரு நீதி அமைச்சர் என்று சொல்லக்கூடிய விஜயதாஸ ராஜபக்ஷ இந்தச் சபையைப் பிழையாக வழி நடத்துவதற்காக அப்பட்டமான பொய்களையும் கூறியிலுருக்கின்றார். அதற்குப் பின்னர் டி.எஸ்.சேனநாயக்க சிங்களம் அல்லாத ஏனைய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய போது, காங்கிரஸுடனும் பேச்சு நடத்தினார். அப்போது அந்தப் பேச்சுகளிலே மலையக மக்களுடைய பறிக்கப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் ஒரு நிபந்தனை விதித்திருந்தது. இதற்கு டி.எஸ்.சேனநாயக்க, தான் அதனை வாபஸ் பெற முடியாது ஆனால், புதிய



சட்டத்தைக் கொண்டு வந்து இந்த மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமையை வழங்குவதற்குரிய நடவடிக்கைகயை எடுப்பதாகக் கூறியிருந்தார். அந்தப் பேச்சுகள் ஊடாக இந்திய – பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் 1949 ஆம் ஆண்டு இலக்கம் 3 சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இணங்கினார்.

அந்தச் சட்டத்தில் இந்திய பாக்கிஸ்தானிய மக்கள் 10 வருடங்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்ததாக நிரூபிக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால், பேச்சுகளுடாக அந்தக் கால எல்லையையும் குறைத்து தனிநபர் 10 வருடங்களாகவும், குடும்பம் 7 வருடங்களாகவும் இருந்ததாக நிரூபிக்கும் பட்சத்திலே இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவார்கள் என்ற வகையிலே மாற்றியமைக்கப்பட்டது. ஆயினும், இந்தக் கால எல்லையை 5 வருடங்களாகக் குறைக்க வேண்டும் எனக் கேட்டும் டி.எஸ்.சேனநாயக்க அந்தக் கோரிக்கையை மறுத்திருந்தார். இந்தப் பேச்சுகளில் ஆரம்பத்திலிருந்து தலையிட்டு தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த ஜவர்கலால் நேரு, டி.எஸ்.சேனநாயக்க இதற்கு கீழ் இறங்கி வரப்போவதில்லை, ஆகவே, 85 வீதமான மலையக மக்களுடைய பிராஜாவுரமையை இதன்மூலம் பெற்றுக்கொண்டு ஏனையவற்றை பின்னர் பெற்றுக்கொள்ளலாம் என்று கேட்டதற்கிணங்கவே தமிழ்க் காங்கிரஸ் இந்தியா – பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு ஆதரவை வழங்கினார்கள்.

மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமையை வழங்கும் சட்டத்துக்குதான் ஆதரவை வழங்கினரே தவிர பிரஜாவுரிமையை பறிப்பதற்கான சட்டத்தை காங்கிரஸ் எதிர்த்தே வாக்களித்திருந்தது. 1949 ஆம் ஆண்டு 3 ஆவது இந்திய பாக்கிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தை தமிழ்க் காங்கிரஸ் ஆதரித்த தன் காரணமாகத்தான் மலையக் மக்களின் பெருந்தலைவராக இருக்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் கூட இந்த நாட்டின்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# நுவரெலியா தபால் நிலையத்தின் கட்டடத்தை முதலீட்டு திட்டத்துக்குப் பயன்படுத்த அனுமதி

நுவரெலியா தபால் நிலையக் கட்டடத்தை முதலீட்டு திட்டமொன்றுக்காகப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர கருத்துத் தெரிவிக்கையில், தபால் நிலையத்திற்கான மாற்று இடமொன்று வழங்கியதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

'உங்கள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் பற்றி சில அன்பர்கள் குறிப்பிட்டார்கள். அதனால் தெரிந்த மொழி வல்லுநர்கள் மூலம் உங்கள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் சிலவற்றை மொழி பெயர்த்துப் படித்தேன். அதிர்ந்து போனேன். உங்களைத் தமிழில் மூத்த பத்திரிகையாளர் என்கிறார்கள். ஆனால் உங்கள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங்களின் போக்கு அப்படி அமையவில்லை. அதில் 'இலங்கை அரசு' என்பதை 'சிங்கள – பௌத்த பேரினவாத அரசு' என்றுதான் சஞ்சலம் இன்றி அப்பட்டமாக நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள். 'இலங்கை இராணுவத்தை' நீங்கள் 'சிங்கள இராணுவம்' என்று விளிக்கின்றீர்கள். ஆசிரியர் தலையங்கங்களின் சில மாண்புகளை – தார்மீகங்களை – நீங்கள் கடைப்பிடிக்கவில்லை என்பது உங்கள் குறித்து வெட்கப்படும் நிலைமையை எனக்கு ஏற்படுத்தியது." என்றார் அந்த நண்பர்.

காட்டமான வார்த்தைகளில், அற்ப மனிதரை நோக்குவது போல என்னைக் கருதி அவர் பேசுகின்றார் என்பது புரிந்தது. நான் பதிலுக்குச் சீற்றத்தையோ கோபத்தையோ காட்டவில்லை. முதலில் சிரித்தேன். பிறகு பதில் அளித்தேன். "நீங்கள் தார்மீகம், மாண்பு பற்றி எல்லாம் பேசுகின்றீர்கள். ஆனால் சட்டப்படி – அதுவும் உங்கள் சிங்களத்தின் சட்டப்படி – நான் எழுதுகிறேன்" – என்று தொடங்கி அவருக்கு நல்ல சூடு வைத்தேன்.

"இந்த நாடு சுதந்திரம் அடைந்த போது இருந்த அரசமைப்பு வேறு. அதை 1972 இல் குடியரசாக மாற்றினீர்கள். அப்போது சிறுபான்மையினரான தமிழர்கள் சமர்ப்பித்த மாற்று யோசனைகளை எல்லாம் அடியோடு நிராகரித்து, இந்த நாட்டை தனித்து பௌத்தத்தையும் சிங்களத்தையும் போற்றும் நாடாக்கினீர்கள் – அரசமைப்பின் சரத்துக்கள் வாயிலாக. சட்டரீதியாக மாண்பில்லாத அந்த வேலையைச் செய்தீர்கள். தனிச் சிங்களச் சட்டம் மூலம் தமிழ் மொழியை மிதித்தீர்கள். உங்கள் சட்ட மற்றும் அரசமைப்பு ஏற்பாடுகளின் படி உங்கள் நாடு 'பௌத்த – சிங்கள' நாடு. அங்கு நீங்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதனால் – பேரினத்தவர்கள் என்பதனால் – அதை ஒருதலைப் பட்சமாகச் சட்டமாக்கி நீங்க முன்னெடுக்கின்றீர்கள் என்பதனால் – அதனை 'பௌத்த – சிங்கள பேரினவாத நாடு' என்றும், அதன் அரசை 'பௌத்த – சிங்களப் பேரினவாத அரசு' என்றும் குறிப்பிடுகின்றோம். இது, சட்ட ஏற்பாட்டின் படியான சொற்பதம். வியாக்கியானம்." – என்றேன் நான்.

அவர் வாயடைத்துப் போனார்.

"இந்த நாட்டின் இராணுவம் 'இலங்கை இராணுவம்' அல்ல. அது இலங்கையின் இராணுவம் என்றால் தமிழ் மக்களின் இன விகிதாசாரப்படி அதில் குறைந்த பட்சம் 12 வீதம் தமிழ் படையினர் இருப்பார்கள். ஆனால் அப்படி இருக்கவில்லை. அவ்வாறு தமிழர்களை அடியோடு புறக்கணித்து, முழு சிங்களமயப்படுத்தப்பட்ட இராணுவமாக அது இருப்பதால் அது 'சிங்கள இராணுவம்'தான். இலங்கை இராணுவம் அல்ல" என்று நான் செமத்தியாகக் கொடுத்தேன்.

அவர் வேறு கதை பேசவில்லை.

"உங்கள் விளக்கம் சரி. தென்னிலங்கை தன்னை திருத்தினால்தான் உங்கள் எழுத்து மாறும். உங்கள் மக்களின் – தமிழ் மக்களின் – எண்ணமும் மாறும். தென்னிலங்கை தன்னைத் திருத்திக் கொள்ளாத வரை உங்கள் எழுத்தை – போக்கை – மாற்றும்படி கோருவது அர்த்தமற்றது" – என்றார் அவர்.

### புலிச் சின்னங்களை...

பிரபாகரனின் படத்தைப் பயன்படுத்துபவர்கள் கட்டாயம் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"போரில் உயிரிழந்த உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்தும் போது அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் விடுதலைப் புலிகளின் சின்னங்களைப் பயன்படுத்துபவர்கள், புலிகள் மாதிரிக் காட்சியளிப்பவர்கள், பிரபாகரனின் படத்தைப் பயன்படுத்துபவர்கள் கட்டாயம் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அவர்களுக்கு மன்னிப்புக் கிடையாது. சட்டம் தன் கடமையைச் செய்யும். நீதிமன்றம் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாகச் செயற்படும். விடுதலைப் புலிகள் அமைப்பு, இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு என்பதை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்." – என்றார்.

கடந்த மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

### நீர்க்கட்டணத்துக்கு...

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த இது தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

நீர்க் கட்டணத்தை அதிகரிக்காமல் இருக்க முடியாது எனவும், நீரைப் பெற்றுக்கொள்வதற்கு மின்சாரம் தேவைப்படுகின்றது எனவும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த சுட்டிக்காட்டினார்.

அதற்காக விலைச்சூத்திரம் ஒன்றை அறிமுகம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போரில் மரணித்த தமது சொந்தங்களைத் தமிழர்கள் நினைவேந்தும்போது அதற்குப் புலி முத்திரை குத்த முடியாது. அதேவேளை, நினைவேந்தல் என்ற பெயரில் நீதிமன்றக் கட்டளைகளை மீறிப் புலிகளைக் கொண்டாடுபவர்களைக் கைது செய்யாமல் விடவும் முடியாது. இதற்குள் அரசியல் ஆதாயம் தேடவும் சிலர் முற்படுகின்றார்கள். புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. சிலரின் சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களுக்கு என்னால் அவர்களின் பாணியில் பதிலளிக்க முடியாது.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதிப் பதவியை நான் தக்க வைப்பதற்காக நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமான ராஜபக்ஷக்களைப் பாதுகாத்து வருகின்றேன் என்ற கருத்தையும் சிலர் முன்வைத்து வருகின்றனர். ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. அவர்கள் தவறு செய்திருந்தால் நீதிமன்றம் அதற்குரிய தண்டனையை வழங்கும். உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பை வைத்துக்கொண்டு என் மீது பழிசுமத்த வேண்டாம். ராஜபக்ஷக்களுக்குத் தண்டனை கிடைக்க வேண்டுமென விரும்புபவர்கள் நீதிமன்றத்தை நாடலாம். என்னை விமர்சிப்பதால் எவருக்கும் எந்தப் பயனும் இல்லை." – என்றார்.

# நீதி அமைச்சர்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரஜையாக அங்கீகரிக்கப்பட்டு இந்தச் சபையிலே மலையக மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது.

உண்மை இவ்வாறிருக்க – இனவாத நோக்கத்திலும் எங்களை ஒரு தவறான தரப்பாகக் காட்டுவதற்கும், பொறுப்பாக நடத்து கொள்ளவேண்டிய அமைச்சர் என்ற வகையிலே, அதுவும் ஒரு நீதி அமைச்சர் என்ற வகையிலே மாபெரும் அநீதியொன்றை இந்த அமைச்சர் இந்த சபையிலே எனக்கெதிராகவும் எனது அமைப்புக்கு எதிராகவும் செய்திருக் கிறார். இதற்கும் மேலாக – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் எனது சக நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்தி ரனை ஒரு கொலைகாரனாகவும் ஆயி ரக்கணக்கில் மக்களைக் கொலை செய்த வராகவும் குறிப்பிட்டிருக்கிறார். இது ஒரு அப்பட்டமான பொய் மட்டுமல்ல, இந்த மாதிரியான கருத்தை வெளியிட்டதால் விஜயதாஸ ராஜபக்ஷ நீதியமைச்சர் என்ற பதவிக்குத் தகுதியில்லாதவர் என்பதை அவரே நிரூபித்திருக்கின்ற நிலையில் அவர் உடனடியாக இந்தப் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும். அல்லது மதிக்கப்படக்கூடியவராக அவர் இருப்பாரானால் இந்தப் பொய்களைக் கூறியதற்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

கௌரவ சபையிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக இந்த வகை யான பச்சைப் பொய்களைச் சொல் வதை ஒரு போதிலும் ஏற்கமுடியாது. ஆகவே, இதற்குரிய நீதியை வழங்குவதற் காக சபாநாயகருக்கு இந்த விடயத்தை சமர்ப்பிக்கின்றேன்.

அடுத்ததாக நானும் கஜேந்திரனும் திட்டமிட்டு குழப்பங்களை ஏற்படுத்துவதற் காக வடக்கில் இருந்து ஆட்களை வாக னங்களில் ஏற்றி கிழக்குக்குக் கொண்டு சென்று நினைவுகூரலை செய்ததாகவும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சொல்லியிருந்தார். நான் ஒரு நாடாளு மன்ற உறுப்பினராகவும், ஒரு கட்சியின் தலைவராகவும் இருக்கின்றேன். தாங் கள் நினைவுகூருகின்ற இடத்தில் தங்க ளுக்கு இராணுவமும் பொலிஸாரும் அச்சுறுத்துகின்றார்கள் என்றும், தங்க ளுக்குப் பயமாகவும் இருக்கின்றது என்றும், கிழக்குக்கு வாருங்கள் என்றும் மக்கள் கேட்ட நிலையில் நானும் கஜேந்திர னும் மட்டும் சென்றிருந்தோமே தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்களை வாகனங்களில் கொண்டு சென்றி ருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் – ஆரம்பத்திலிருந்தே எனது பேச்சில் நான் சுட்டிக்காட்டிய விடயம் என்ன வென்றால் –2015 ஆம் ஆண்டிலும் விஜயதாஸ ராஜபக்ஷவே தான் நீதி அமைச்சராக இருந்தபோது, அப்போ தையவெளிவிவகாரஅமைச்சராகஇருந்த மங்கள சமரவீரவுடன் ஜெனிவாவுக் குச் சென்று பயங்கரவாதத் தடுப்புச் சட் டத்தை அமுல்படுத்த மாட்டோம் என்ற உத்தரவாதத்தை சர்வதேச சமூகத்துக்கு வழங்கியிருந்தீர்கள்.

அதுமட்டுமல்ல நினைவு கூர்தல் தொடர்பாக அரசு எந்தத் தடையும் விதிக் கப்போவதில்லை என்றும் தொடர்ச்சியாக உறுதியளித்து வந்தீர்கள். அரசு இவ்வாறு சர்வதேச சமூகத்திடம் உறுதியளித்திருந் தும், பொலிஸார் நீதிமன்றங்களை நாடி நினைவேந்தல்களுக்கு எதிராக தடைகளை ஏற்படுத்தக் கோரி நீதிமன் றங்களுக்குச் சென்றிருந்தும், மூதூர் நீதிமன்றத்தைத் தவிர ஏனைய நீதி மன்றங்கள் நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்காமல், பொலிஸாரின் கோரிக் கைகளை நிராகரித்திருந்தது. இந்த



நிலையில் கூட, நினைவு கூருவதற் குச் சென்ற பத்துப் பேரை கிழக்கு மாகா ணத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத் தின்கீழ் கைது செய்து சிறையிலே அடைத்திருக்கிறார்கள். நீதிமன்றமே தடைவிதிக்காத நிலையில் – அரசே நினைவுகூர்தலைச் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கும் நிலையில் – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல் படுத்த மாட்டோம் என்று அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மீறி, பொலிஸார் நடந்துள்ள விடயம் தொடர்பாகவே அரசு தலையிட வேண்டும் என்று கேட்டிருந்தேன்.

நீங்கள் சர்வதேச சமூகத்துக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கும் வழங்கிய வாக்குறுதியை நடை முறைப்படுத்துவதற்கே தலையிடுமாறு கேட்டிருந்தேன். அமைச்சர் என்ற வகை யில், தான் நீதிமன்ற விடயத்திலோ, பொலிஸாருடைய விடயத்திலோ, சட் டமா அதிபர் திணைக்கள விடயத்திலோ தலையிடுவது முறையல்ல என்றும், அது ஜனநாயக விரோதம் என்றும் விஜ யதாஸ ராஜபக்ஷ தனது உரையில் குறிப் பிட்டு தன்னை ஒரு கடும் நேர்மையான ஆளாகக் காட்டிக்கொள்ள முற்பட்டிருந் தார். ஆனால், உண்மை என்னவென் றால் – இதே விஜயதாஸ ராஜபக்ஷதான் 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதி சண்டே ஒப்சேவர் பத்திரிகை பேட்டியொன்றில் இப்படி தனது பெருமையை கூறியிருக் கின்றார். அது என்னவென்றால்" – நான் நீதி அமைச்சர் என்ற வகையில் சட்டமா அதிபர் திணைக்களம் நடத்திய விசாரணையில் நேரடியாகத் தலையிட்டு கோட்டபாய ராஜபக்ஷவை அவன்காட் வழக்கில் கைதுசெய்வதை தடுத்து நிறுத்தி னேன்" – என்று பெருமைப்பட்டுள்ளார்.

அதேபோன்று–ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழுவுக்கு சாட்சி வழங்கிய இடத்தில் இவ்வாறு அவர் குறிப்பிட்டிருக் கின்றார். "நான் அவசர அவசரமாக ஜனா திபதியுடனும் பிரதமருடனும் முன்னாள் பொலிஸ்மா அதிபருடனும் தொடர்பு கொண்டு கோட்டாபய ராஜபக்ஷவைக் கைதுசெய்தால், அரசை தவறான முறை யிலே சித்தரிக்கும் என்றும் சுட்டிக்காட்டி அந்தக் கைதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூறி அந்தக் கைதை நிறுத்தியிருந்தேன்" – என்றும் குறிப்பிட் டிருந்தார்.

இவரது இந்த நடவடிக்கைகள்தான் தலையீடுகள் ஆகும். அரசின் கொள்கை முடிவுகளுக்கு மாறாக அமைச்சர் என்ற வகையில் அதனுள் தலையிட்டு ஊழல் வாதிகளை காப்பாற்ற செயற்பட்டமை தான் தலையீடும் முறைகேடுமே தவிர, நான் குறிப்பிட்ட – அரசே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம், நினைவுகூரலாம் என்று கூறிய விடயங்கள் – அரசின் கொள்கை யாக சர்வதேச மட்டத்துக்கு உறுதி வழங் கியிருக்கவும், அதைப் பொலிஸார் மீறு கின்ற போது, அமைச்சர் அதில் தலை யிட்டு நிறுத்த வேண்டும் என்ற எனது கோரிக்கை தொடர்பாக அமைச்சர் செயற் படுவதும் ஒரு தலையீடாக இருக்க முடி யாது. மாறாக – தவறு நடப்பதை சீர்ப்படுத் தும் செயற்பாடாகவே அது அமையும். ஆகவே – இப்படிப்பட்ட ஒரு நிலையில் – இந்த நீதி அமைச்சர் மிக மோசமாக இந்தச் சபையை பிழையாக வழிநடத்த முயற்சித்து எங்கள் தொடர்பாக அப்பட்ட மான பொய்களையும் சொல்லியிருப்

பதை வன்மையாகக் கண்டிப்பதோடு விஜயதாஸ ராஜபக்ஷ நீதி அமைச்சர் என்ற பதவிக்குத் தகுதியற்றவர் என்ற விடயத்தையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இறுதியாக–இந்தப்பயங்கரவாதத்தடுப் புச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று நான் கூறியபோது – ஒரு சில படங் களைச்சபைக்குக்காட்டியிருந்தார். அந்தப் படங்கள் விடுதலைப் புலிகளுடைய தலைவரின் முகமும் விடுதலைப் புலிக ளின் சின்னமும் பொறிக்கப்பட்ட ரீ சேட் போடப்பட்ட படங்களாகும். அப்பொழுது மிகத் தெளிவாக நான் குறிப்பிட்டிருந் தேன். ஒருவேளை – மிகப் பாரதூரமான நிலைமையொன்று உருவாகியிருந்தால், பாரிய தாக்குதல் நடைபெற்று நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பும் சீர்குலையும் நிலைமை உருவாகியிருந்தால் – இந்தப் பயங்கரவாதத் தடைச்ச சட்டம் நீக்கப்பட வேண்டிய ஒரு கொடூரமான சட்டமாக இருந்தாலும், அந்த சூழ்நிலையைக் கட்டுப்படுத்த வேறொரு சட்டமும் இல்லாத இடத்தில் அதனைப் பாவிப்பதானால் சிலவேளைகளில் நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆனால், ரீசேட் அணிவதோ அல்லது அரசே விரும்பி அனுமதித்த நினைவுகூரலை செய்வ தையோ தடுப்பதற்கு இந்தச் சட்டத்தைப் பாவிப்பது தவறென்பதைத் தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

ஆகவே, இந்த அமைச்சர் செய்யாது விட்டாலும், இந்த அரசு தலையிட்டு அந் தத் தவறைச் சரிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

இதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பதிலளிக்கையில்,

"நாங்கள் பயங்கரவாதத் தடைச் சட் டத்தை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று கூறிய விடயத்தை ஏற்றுக்கொள் கிறேன். ஆனால், அதற்குப் பதிலாக இன் னொரு சட்டம் கொண்டு வருதற்கு எடுத்த முயற்சிகளுக்கு எதிர்ப்புக்கள் ஏற்பட்ட தால் அதனை நிறைவேற்ற முடியாத நிலையிலேயே இந்தச் சட்டம் தொடர்ந்தும் இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த விடயத்தைதான் நாட்டினுடைய சட்டம் என்னும் கோணத்தில் தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தேன்." – என்றார்.

அதற்கு கஜேந்திரகுமார் பொன்னம் பலம் எம்.பி. பதிலளிக்கையில்,

"நான் எனது பேச்சிலேயே குறிப்பிட்டி ருக்கின்றேன், பாரிய தாக்குதல் ஒன்று நடைபெற்றிருந்தால் நீங்கள் இந்தச் சட்டத்தை மீள நடைமுறைப்படுத்துவது பற்றி யோசிக்க முடியும் என்று தெரிவித் திருந்தேன். நான் கதைக்கும் விடயம் என்னவெனில் – அரசும், நீதிமன்றமும் அனுமதி கொடுத்த நிகழ்வில் கலந்து கொள்வதைத் தடுப்பதற்குப் பொலிஸார் அந்தச் சட்டத்தைபி பயன்படுத்துவதைத் தான் நான் கடுமையாகக் கண்டித்து நீங்கள் அதனை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டிருந்தேன். அதேபோன்று – யாழ்ப்பாணத்தில்தான் நீங்கள் படங்க ளில்காட்டியரீசேட்சம்பவம் நடந்திருந்தது. கிழக்கில் அப்படி நடந்திருக்கவில்லை. கிழக்கில் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு நியாயத்தையும் உங்க ளால் சுட்டிக்காட்ட முடியாது. யாழ்ப்பாணத் தில் நடந்த சம்பவம் தொடர்பாகவும், அந்தச் சம்பவத்தை விசாரிக்க வேண்டாம் என்றும் நான் கோரவில்லை. ஆனால், அதையும் கூட பயங்கரவாதத் தடைச் சட் டத்தின் கீழ் விசாரிக்க வேண்டியவிடயம் அல்ல. சாதாரண சட்டத்தின் கீழ்தான் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை மட்டுமே நான் சொல்லியிருந்தேன். ஏனெனில் அது பயங்கரவாதச்செயற்பாடு அல்ல. இப்படிப்பட்ட செயற்பாடுகளையும் நீங்கள் பயங்கரவாதமாகக் கருதி செயற்படுவது தான் மிகக் கொடூரமான விடயமாக சர்வ தேச சமூகமே கருதி அதைச் செய்யாதீர் கள் என்று சொல்லி வருகின்றது." – என்றார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# இது பிரிட்டனின் தோல்வி

இலங்கையில் தமிழர் பகுதிகளில் இராணுவ மயமாக்கல் தொடர்வதைச் சுட்டிக்காட்டியுள்ள பிரிட்டனின் தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனல் இது பிரிட்டனினதும் சர்வதேச சமூகத்தினதும் கூட்டு தோல்வி எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தடைகளை விதித்தமைக்காக அமெரிக்காவையும் கனடாவையும் பாராட்டுவதாக தெரிவித்துள்ள அவர், தடைகள், வர்த்தக வரிகள் மூலம் அதிகூடிய அழுத்தங்களை இலங்கைக்குக் கொடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் தோல்வி கண்டது என்ற கூற்றுக்கு முன்னர், இலங்கை விவகாரம் இத்துணை மோசமான தற்கு - இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் இன்று அவர்களது தாயகத்திலேயே அந்நியர்களாக்கப்பட்டிருக்கும் கொடூரத்துக்கு முழுக் காரணம் - முற்றான காரணம் - பிரிட்டன் தான்.

மறுக்கவே முடியாத இந்த உண்மையை வெள்ளையர்கள் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

16ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குள் அந்நியர்கள் காலடி எடுத்து வைத்த சமயத்தில் தமிழர் தாயகமான இலங்கையின் வடக்கும் கிழக்கும், இங்கு தனியான தமிழ் ராஜ்ஜியமாக இருந்தது. தனியான மொழி, தனியான நிலத் தொடர்ச்சி கொண்ட தாயகம், தனித்துவமான கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைமைகள், வழக்காறுகள் போன்றவற்றோடு தனித்தேசமாக அது விளங்கியது.

இலங்கைத் தீவின் பிற பகுதிகளில் இருந்த சிங்கள ராஜ்ஜியங்களிலிருந்து வேறுபட்டுத் தனித்துவ தேசமாக - தேசியமாக - நீண்ட நெடுங்காலம் அது நிலைபெற்றிருந்தது.

இலங்கைத் தீவுக்குள் காலடி எடுத்து வைத்த போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் தென்னிலங்கையில் இருந்த சிங்கள ராஜ்ஜியங்களைக் கைப்பற்றிய போது, அதனுடன் சேர்ந்து ஒரு கட்டத்தில் தமிழர் தேசத்தையும் ஆக்கிரமித்தனர்.

எனினும், தமிழர் தாயகத்தை தனி ராஜ்ஜியமாக - தனித் தேசமாக - தனியானஆளுநர்களின் கீழேயே - அவர்கள் நிர்வகித்தனர்.

போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரும், அவர்களிடம் இருந்து ஆங்கிலேயரும் தமிழர் தேசம் உட்பட்ட இலங்கைத் தீவை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த போதிலும், முன்னைய இருதரப்பினரையும் போல ஆரம்பத்தில் ஆங்கிலேயரும் தமிழர் தேசத்தை தனியான ராஜ்ஜியமாகவே நிர்வகித்தனர்.

எனினும் 1828 இல் தமது நிர்வாக ஒழுங்குக்கு வசதியாக இலங்கைத் தீவு முழுவதையும் ஒரு நிர்வாக கட்டமைப்புக்குள் கொண்டு வந்து, ஓர் ஆளுநரின் கீழ் அவற்றை ஒன்றிணைத்தனர்.

அடுத்த 120 ஆண்டுகளாக அவ்வாறே இலங்கைத் தீவை நிர்வகித்த பிரிட்டிஷார், 1948 இல் இலங்கையை விட்டு வெளியேறிய போது, தனித்தனியாகத் தாம் கைப்பற்றிய சிங்கள தேசத்தையும், தமிழர் தேசத்தையும் ஒன்றித்து நிர்வகித்து விட்டு, இலங்கைத் தீவில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் கைகளில் அதிகாரத்தை ஒப்படைத்து, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் தேசத்தையும் - அட்சரகணித எண்ணிக்கையை மட்டும் கோட்பாடாகக் கொண்ட ஜனநாயகத்தின் பெயரால், பௌத்த - சிங்கள பேரினவாத தேசத்துக்குள் அடிமையாக மாட்டிக் கையளித்து விட்டு வெளியேறினர்.

முதலில் போர்த்துக்கேயரிடமும், பின்னர் ஒல்லாந்தரிடமும், தொடர்ந்து பிரிட்டிஷாரிடமும் பறிபோன தமிழர் தேசத்தின் இறைமை இறுதியில் பௌத்த - சிங்கள பேரினவாதிகளின் கைகளில் அடிமையாகச் சிக்கியது இப்படித்தான்.

அதுவே இலங்கைத் தீவில் தமிழர்தேசம் இத்துணை பேரழிவுகளையும், அவலங்களையும், தனித்துவ இழப்பையும் எதிர்கொள்வதற்குப் பிரதான காரணமாயிற்று.

ஆகவே இலங்கைத் தீவில் தமிழர்களின் அழிவு என்பது ஒட்டுமொத்த பிரிட்டனின் அணுகுமுறைத் தவறின் விளைவு. பிரிட்டனின் முழுத் தோல்வி.

# மலையக மார்க்க ரயில் சேவைகள் பாதிப்பு




மலையக மார்க்க ரயில் சேவைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன ரயில் நிலையங்களுக்கிடையில் நேற்றுப் பிற்பகல் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன்காரணமாக, மலையகத்துக்கான ரயில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ரயில் சேவைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மண்மேட்டை அகற்றுவதற்கான பணிகள் நேற்று இரவு வரை முன்னெடுக்கப்பட்டன.




# அச்சுவேலியில் டெங்கு விழிப்புணர்வு வீதி நாடகம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு தெருவெளி நாடகம் அச்சுவேலியில் நேற்று நடைபெற்றது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்களால், மக்கள் மத்தியில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்தத் தெருவெளி நாடகம் அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

டெங்கு நோயை ஏற்படுத்தும் காரணிகள், மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம், யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தொடர்பான விபரங்கள், அச்சுவேலிப் பகுதியில் அதிகரித்துள்ள டெங்கு நோய் தொடர்பான விவரங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இந்தத் தெருவெளி ஆற்றுகை மூலம் வெளிப்படுத்தப்பட்டன.

























# தெல்லிப்பழையில் வன்முறையில் ஈடுபட்ட வாள்வெட்டுக் கும்பலில் 3 பேர் சிக்கினர்!

## மேலும் மூவரைத் தேடி வேட்டை; ஹயஸ் வாகனமும் மீட்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

**யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் கடந்த திங்கட்கிழமை நடந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**தாக்குதலுக்குப் பயன்படுத்திய ஹயஸ் வாகனமும் கைப்பற்றப் பட்டுள்ளது.**

**கைது செய்யப்பட்டவர்கள் வள்ளிபுனம், முத்துஐயன்கட்டு, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.**

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழையில் ஹயஸ் வாகனம் ஒன்றில் வந்த கும்பலால் வீதியில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இளைஞர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஒருவர் காயமடைந்திருந்தார்.

தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களைத் துரத்திச் சென்று பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய போதும், அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேனன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்களைக் கிளிநொச்சிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர்.

6 மாதங்களுக்கு முன்னர் வினோதன் என்பவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் ஹயஸ் வாகனத்தில் இருந்த துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களை மறைக்கவும், பாகங்களை மாற்றவும் முயன்றுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள மூவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், கைது செய்யப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.





# இந்திய மீனவர்கள் 22 பேர் கைது!



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் 4 படகுகளுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரம் மற்றும் கோட்டைபட்டினம் பகுதிகளில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட படகுகளே நேற்று மாலை இலங்கையின் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் கடற்பரப்புகளுக்குள் எல்லை தாண்டி உட்புகுந்து மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் ஒரு படகுடன் கைது செய்யப்பட்ட 8 தமிழக மீனவர்களும் மன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கடற்பரப்பில் மூன்று படகுகளுடன் கைதான 14 மீனவர்களும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ள நிலையில், இன்று மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

# இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் மாயமான மோட்டார் சைக்கிள் காலியில்

## கிளிநொச்சியில் வசிக்கும் உரிமையாளருக்கு அழைப்பாணை

(ந.லோகதயாளன்)

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் மோட்டார் சைக்கிளை இழந்த கிளிநொச்சியைச் சேர்ந்த உரிமையாளர் ஒருவருக்கு நேற்று காலி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இறுதி யுத்த காலத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் முள்ளிவாய்க்காலில் விடப்பட்ட நிலையில் அது படையினரின் பிடியில் இருந்து காணாமல்போயிருந்தது.

இவ்வாறு போர்க் காலத்தில் பறிபோன மோட்டார் சைக்கிளை உரிமையாளர் நீண்ட காலம் தேடியும் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் 14 ஆண்டுகளின் பின்பு கடத்தல் சம்பவம் ஒன்றுடன் இந்த மோட்டார் சைக்கிள் தொடர்புபட்டு மீட்கப்பட்டுள்ளதால் உரிமையாளரை நாளை 8 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு காலி நீதிமன்றம் மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இறுதி யுத்தத்தின்போது தமிழ் மக்களால் முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்ட பல நூறு வாகனங்கள் படையினரின் துணையுடன் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று ஏற்கனவே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கணக்காய்வை மேற்கொள்ளுமாறு மின்சார சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினர் அறிவிப்பு

இலங்கை மின்சார சபையின் இலாபம் மற்றும் மின்சார உற்பத்தி தொடர்பில் சுயாதீன கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சார சபையின் செலவுகள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட முரண்பாடான தரவுகளைக் கருத்தில்கொண்டு இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் எந்தத் தரப்பினரால் இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவுள்ளது என்பது தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தற்போதைய நிலைமைக்கு மத்தியில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான முன்மொழிவுகளை இந்த மாதத்துக்குள் முன்வைக்குமாறும் மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணத்தைத் திருத்துவதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்படும் என்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.



# சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையில் இருந்து நல்லூர் ஆலயத்துக்கு எடுத்து வந்த தெற்கு இளைஞர்கள்

**(கி.வசந்தரூபன், எஸ்.நிதர்ஷன்)**

நாடு முழுவதும் உள்ள 100 இளைஞர் அமைப்புக்கள் சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி எடுத்து வரும் பயணத்தில் ஈடுபட்டனர்.

சர்வமத தலைவர்களின் உயர்ந்தபட்ச ஆதரவுடன் “ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட 100 இளைஞர்கள் அமைப்புக்கள்” கண்டி தலதா மாளிகை தொடக்கம் நல்லூர் கந்தசாமி கோயில் வரை உள்ள அனைத்து சர்வமத தலைவர்களுக்கும் சமாதானத்தின் செய்தி மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தல் என்னும் நிகழ்வானது கண்டி தலதா மாளிகை மற்றும் கண்டி சிறீ நாட்ட தேவாலத்துக்கு அருகாமையில் ஆரம்பமானது.

சயோமோபாலிக மகா நிகாயே அஸ்கிரி மகா விகாரை பிரிவினரின் ராஜ பூஜித விங்சத் வர்கிக காரக சங்க சபிக கலா நிதி வணக்கத்துக்குரிய கெட்டகும்பரே தம்மாராம தேரரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

அதன்பின்னர் கண்டி கணதெவி கோயிலின் நம்பிக்கையாளர் சபை மாவில்மட இந்து கோவிலின் குருக்கள் ஆகியோருக்கு இந்த முன்மொழிவுகள் வழங்கி வைக்கப்பட்டன. அடுத்து மாவில்மட ஜும்மா பள்ளிவாசல் மௌலவி உட்பட நம்பிக்கையாளர் சபையைச் சந்திக்கச் சென்ற போது அவர்களுக்கு உயர்ந்தபட்ச வரவேற்பளிக்கப்பட்டது. சமாதானத்தின் செய்தியைப் பாதுகாக்கத் தாம் செயற்படுவதாக உறுதியளித்த அவர்கள் இளைஞர்களின் இந்த முயற்சி காலத்தின் தேவையாக அமைவதாகத் தெரிவித்தார்.

உடரட்ட அமரபுர நிகாயே மல்வத்து பிரிவின் அனுநாயக்க அலவத்துகொட கொனகலகல சிறீ சத்தானந்த மகா பிரிவெனே பிரிவேனாதிபதி வணக்கத்துக்குரியகொனகலகலஉதிததேரர்அனைத்து மதங்களையும் சேர்ந்த இளைஞர்கள் சமாதானத்தின் செய்தியை முன்னெடுக்க எடுக்கும் செயற்பாட்டை பாராட்டியதுடன், அடுத்த வருடம் தேர்தல்கள் நடைபெறும் வருடமாக அமைவதால் அரசியல் இலாபங்களுக்கு இனவாதத்தை பயன்படுத்தும் செயற்பாடுகளுக்கு இளைஞர்கள் சந்தர்ப்பம் வழங்க வேண்டாம் என வேண்டிக்கொண்டார்.

அதன் பின்னர் மாத்தளை கொன்கஹவெல ஜும்மா பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை மற்றும் மௌலவியை சந்தித்த இவர்கள், பின்னர் மாத்தளை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அலுவிகாரை விகாரையின் விகாராதிபதியை சந்தித்ததுடன் அதனை தொடர்ந்து சீயம் நிகாய ரங்கிரி தம்புளு பிரிவின் மகாநாயக்க தேரர் இனாமலுவே சிறீ சுமங்கல தேரரை சந்தித்தனர்.

அதனைத் தொடர்ந்து மிகிந்தலை ரஜமகா விகாரையின் விகாராதிபதி வலஹாஹெங்குனவெவ தம்மரதன தேரரை சந்தித்த இவர்களுக்கு தேரர் நீண்ட அறிவுரைகளை வழங்கியதுடன் இவ்வாக்கபூர்வமான செயற்பாட்டுக்கு தனது ஆசீர்வாதம் மற்றும் ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அனுராதபுரம் அட்டமஸ்த்தான ருவன்வெலிசாயவின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய ஈத்தல் வெட்டுனவெவ ஞானதிலக்க தேரர் அவர்களைச் சந்தித்து முன்மொழிவை வழங்கியதுடன் அதனை மேலும் விருத்தி செய்ய தேவையான முக்கியமான ஆலோசனைகளை இதன்போது வழங்கினார்.

இன முரண்பாடுகள் மற்றும் மத பிரச்சினைகள் காரணமாக துயரம் மற்றும் அநீதிக்கு உட்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டல், அரசியல் கலாசாரத்தின் ஊடாகஇனவாதம்மதவாதத்தைஒழித்தல், வர்த்தக நோக்கத்துக்காக இனவாதம் மற்றும் மதவாதப் பிரச்சனைகளை ஏற்படுத்தலை தடுத்தல் மற்றும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப பொதுதளமொன்றைக் கட்டியெழுப்பல் போன்றன கலந்துரையாடப்பட்டதுடன், சர்வமதத் தலைவர்கள் அவர்களது பூரண ஒத்துழைப்பை நாட்டில் எதிர்காலத்தில் சமாதானத்தை கட்டியெழுப்ப உதவுவதாக இதன்போது தெரிவித்தனர்.

வவுனியாவுக்கு வருகை தந்த இளைஞர்கள் நான்கு மதத் தலங்களுக்கும் சென்று சமாதானத்தின் செய்தியைப் பரிமாறியதுடன் வவுனியா ஊடக அமையத்திற்கும் விஜயம் செய்து தமது கருத்துக்களைப் பரிமாறினர். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று பல்வேறு மதத்தலைவர்களையும் சந்தித்துடன், தமது பயணத்தை நல்லூர் ஆலயத்தில் நிறைவுக்குக் கொண்டு வந்திருந்தனர்.

















# வவுனியா பிரபல பாடசாலை மாணவரின் ஒன்றுகூடலின்போது வீதியில் கைகலப்பு

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலின் போது பாடசாலைக்கு முன்பாக வீதியில் நின்றவர்களுடன் பாடசாலை மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது. இதன் போது உயர்தர மாணவர்கள் சொகுசு கார்கள் மற்றும் அதியுயர் வேகம் கொண்ட மோட்டர் சைக்கிள்கள் என்பவற்றுடன் பாடசாலைக்கு வருகை தந்ததுடன், பாடசாலை முன்பாக அவற்றைச் செலுத்தி போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தினர்.

இதன்போது பாடசாலையில் ஏனைய வகுப்பு மாணவர்களை ஏற்ற வந்த பெற்றோர் ஒருவருடன் விபத்து ஏற்பட்டதையடுத்து, பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு அப் பகுதியில் இரு தரப்பும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அந்தப் பகுதிக்குப் பொலிஸார் வருகை தந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

இந்தச் சம்பவத்தின் போது, பாடசாலை வளாகத்துக்குள் இருந்து வருகை தந்து உயர்தர மாணவர்கள் பல தடவைகள் பெற்றோருடன் முரண்பட்ட போதும், பாடசாலை நிர்வாகம் மற்றும் கடமையில் இருந்த பதில் அதிபர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைளை எடுக்கவில்லை எனவும், நிலைமையைக் கட்டுப்படுத்தவில்லை எனவும் அப் பாடசாலையின் பெற்றோர்களும், பாடசாலை சமூகத்தினரும் குற்றம் சாட்டினர்.

அந்த மாணவர்கள் பின்னர் குறித்த சொகுசு கார்கள் மற்றும் மோட்டர் சைக்கிள்களில் பயணித்து வைவரவப் புளியங்குளம் பகுதியிலும் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்திக் குழப்பம் விளைவித்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.







# தண்டனைச் சட்டக் கோவையின் அபராதத் தொகையில் திருத்தம்

## அமைச்சரவை அனுமதி

தண்டனைச் சட்டக் கோவையின் அபராதத் தொகைத் திருத்தம் தொடர்பான வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதைய நாணய பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது, விதிக்கப்படும் அபராதத் தொகை குறைவாக உள்ளதால் தண்டனைச் சட்டக் கோவையைத் திருத்தம் செய்வதற்குக் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியளித்திருந்தது.

அதன்படி, புதிய சட்டமூலத்துக்குச் சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதுடன், அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டவுடன், தண்டனைச் சட்டக் கோவை திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.




# உக்ரைன் இராணுவத்தில் கடமையாற்றிய மூன்று இலங்கையர்கள் தாக்குதலில் பலி



உக்ரைன் இராணுவத்தில் பணியாற்றிய மூன்று இலங்கையர்கள் ரஷ்யாவின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளது என்று உக்ரைன் மற்றும் ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த கூலிப்படை உறுப்பினரான கெப்டன் ரென்டீஸ் எனப்படும் அன்ரூ ரனிஸ் ஹேவகே தமது தாக்குதலின்போது கொல்லப்பட்டுள்ளார் என்று ரஷ்ய இராணுவத்தின் சமூக வலைத்தளத்தில் நேற்று தகவல் பகிரப்பட்டிருந்தது.

உக்ரைனுக்காகப் போரிட்ட மேலும் இரண்டு இலங்கைக் கூலிப்படை உறுப்பினர்களும் தமது தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உயிரிழந்த உக்ரைன் சிப்பாய்களின் சடலங்களை வெளியில் எடுத்துச் செல்ல இவர்கள் மூவரும் முயற்சித்தபோது, தாம் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என்று ரஷ்ய இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

உக்ரைனில் உள்ள பக்முத் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று சமூக வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்டன் டென்டீஸ் என்ற பெயரில் உக்ரைனுக்குள் பிரபலமடைந்திருந்த அன்ரூ ரனிஸ் ஹேவகே இலங்கை காலாற்படையின் அதிகாரியாகச் செயற்பட்டுள்ளமையை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இவர் 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி லெப்டினன்டாக இராணுவ சேவையில் இருந்து விலகியுள்ளதுடன், அன்றைய நாளில் அவர் உத்தியோகபூர்வ பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குத் தொழிலுக்குச் சென்ற அவர் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உக்ரைனின் சர்வதேச இராணுவ லீக் எனும் பிரிவில் இணைந்து செயற்படத் தொடங்கியிருந்தார்.

ரஷ்யாவுடன் நடைபெறுகின்ற யுத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு உக்ரைன் ஜனாதிபதி வெளிநாட்டவர்களுக்குஅழைப்புவிடுத்திருந்ததுடன்,அவர்கள் அதற்காக சர்வதேச இராணுவ லீக்கை ஸ்தாபித்தனர்.

உக்ரைன் – ரஷ்ய யுத்தத்தில் முன்னரங்கப் பாதுகாப்பு வலயக் கட்டளை அதிகாரியாக ரனீஸ் சேவையாற்றினார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரனீஸ் ஹேவகே உக்ரைனில் வெளிப்படுத்திய திறமைகள் காரணமாக உக்ரைன் ஜனாதிபதி அவருக்கு இராணுவ பதவி நிலை அதிகாரியாகப் பதவி உயர்வு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,ரஷ்யாவின்தாக்குதலில் உயிரிழந்த, உக்ரைன் இராணுவத்தில் இணைந்து செயற்பட்டிருந்த ஏனைய இரண்டு இலங்கையர்கள் தொடர்பாகவும் தகவல்கள் வெளியாகவில்லை.

# மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகள் ரஷ்ய – இந்திய கூட்டு தனியார் நிறுவனத்திடம்




மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை ரஷ்ய – இந்தியக் கூட்டு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்தது என்று துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் குறித்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் கீழ் மத்தளை விமான நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

அங்கு பணியாற்றும் விமான நிலைய ஊழியர்களுக்கான சம்பளமும் அந்த நிறுவனத்தினூடாக வழங்கத் திட்டமிட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனூடாகக் கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதி, அரசுக்குச் சொந்தமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்தள சர்வதேச விமான நிலையத்தைப் பராமரிப்பதற்காக அரசு வருடாந்தம் 200 கோடி ரூபாவைச் செலவிடுகின்றது என்றும், புதிய வேலைத்திட்டத்தின் மூலம் அந்தத் தொகையைச் சேமிக்க முடியும் என்றும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# நகர்ப்புற வீடுகளின் உரிமை இனி குடியிருப்பாளர்களுக்கே

## வழங்கும் செயற்றிட்டம் பெப்ரவரியில் ஆரம்பம்

நகர்ப்புற வீடுகளின் உரிமையை அதன் குடியிருப்பாளர்களுக்கே வழங்கும் செயற்றிட்டத்தின் முதலாவது கட்டம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்பு உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர வதிவிட அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் உரிமை, இவ்வாறு அதன் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த தெரிவித்துள்ளார்.

இவ்வாறான 52 ஆயிரம் வீடுகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றில் 50 வீத வீடுகளுக்கான உரிமைப் பத்திரங்கள் முதல் கட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவாகச் செயற்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# வைத்தியசாலையில் மதில் இடிந்து வீழ்ந்து ஒருவர் பலி

கடுகன்னாவை வைத்தியசாலையில் மதில் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் பழைய மதிலின் புனர்நிர்மாணப் பணிகளின் போது, நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்துள்ளார்.

மதிலைச் சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த உடுநுவர பகுதியைச் சேர்ந்த 32 வயதான நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

சடலம் கடுகன்னாவை - ஹேனாவல வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார் வடிவேல் சுரேஷ் எம்.பி.



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்

ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் இதற்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

பதுளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பெருந்தோட்ட நிறுவனங்களுடனான நலன்புரி விடயங்கள், மகளிர் மேம்பாடு, சிறுவர் நலத்திட்டங்கள், தமிழ் பாடசாலைகள் உள்ளிட்ட ஏனைய பாடசாலைகள் - சுகாதார சேவைகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பதுளை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான வடிவேல் சுரேஷ், இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் பதவி வகித்து வருகின்றார்.






## இலங்கையை முன்னேற்றும்

# புதிய பொருளாதார வேலைத்திட்டம் ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஆரம்பம்




### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

அனைத்துத் துறைகளையும் நவீனமயப்படுத்தி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் புதிய பொருளாதார வேலைத்திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பழைய முறைகளை தொடர்வதன் ஊடாக நாட்டிற்கு எதிர்காலம் கிடையாது எனவும், கடந்த சில வருடங்களில் ஒரு தேசம் என்ற வகையில் நாம் எதிர்கொண்ட கசப்பான அனுபவத்தை எதிர்கால சந்ததியினர் வரை கொண்டு செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, புதிய பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிடகோட்டையிலுள்ள சோலிஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

18 மாதங்களில் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர் சமூகம் மேற்கொண்டுள்ள பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியான முறையில் நிர்வகிக்காவிட்டால் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, அரசின் பிரதம மதிப்பீட்டாளர் புஷ்பா முத்துகுமாரன, தபால்மா அதிபர் ருவன் சத்குமார மற்றும் அரச மதிப்பீட்டுத் திணைக்கள ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.










# சென்னையில் வடிந்தோடி வரும் வெள்ள நீர்: மீட்புப் பணியில் ஈடுபடும் 75 ஆயிரம் பேர்!





மிக்ஜாம் சூறாவளி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சென்னையில் வெள்ள நீர் வடிந்தோடி வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் வழியாக வெள்ள நீர் விரைவாக வடிந்து வருவதாகவும், வெள்ள பாதிப்பு பணிகளில் 75 ஆயிரம் பேர் ஈடுபட் டுள்ளனர் எனவும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா கூறியுள்ளார்.

தமிழகத்தின் சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் 866 இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதாகவும் 4 வீத பகுதிகளுக்கு மட்டுமே இன்னும் மின் விநியோகம் கொடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 75 ஆயிரம் பேர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.

வெள்ள சேதங்களை மதிப்பிடும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னையில் 4 பேரும் செங்கல்பட்டில் 5 பேரும் உயிரிழந் துள்ளனர்.

தமிழகத்தில் 311 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் 378 குடியி ருப்புகள் முழுமையாகவும் 35 குடியிருப் புகள் பகுதியளவிலும் 88 வீடுகள் லேசாகவும் சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சில பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருப்பதால், அசம்பாவிதங்களை தவிர்க்க மின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த சில பகுதிகளில் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாண வர்கள் நலன் கருதி இன்று சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாட சாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு தமிழக அரசு விடுமுறை அறிவித்துள் ளது.

# மிக்ஜாம் புயலால் தமிழகம், ஆந்திராவில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் இரங்கல்!



தமிழகம், ஆந்திரப் பிரதேசம், புதுச்சேரியில் மிக்ஜாம் புயல் பாதிப்பால் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்குப் பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயலில் காயமடைந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த் தனை செய்த பிரதமர் மோடி, பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவ அதிகாரிகள் களத்தில் அயராது பணியாற்றி வருகின்றனர் எனவும் நிலைமை முழுமையாக இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை தங்கள் பணிகளைத் தொடர்வார்கள் என்றும் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடகமான எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட் டுள்ள பதிவில், “தமிழகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் புதுச்சேரியில் மிக்ஜாம் புயலால் உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருடன் எனது எண்ணங்கள் உள்ளன. இந்தப் புயலால் காயமடைந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பிரார்த் தனை செய்கிறேன். பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவ அதிகாரிகள் களத்தில் அயராது பணியாற்றி வருகின்றனர், நிலைமை முழுமையாக இயல்பு நிலைக் குத் திரும்பும் வரை அவர்கள் தங்கள் பணிகளைத் தொடர்வார்கள்” என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, “அமைச்சர்கள், அதிகாரிகள் முதல் கடைநிலைப் பணி யாளர்கள் வரை மக்களைப் பாதுகாக்கக் களத்தில் ஓய்வின்றி உழைத்து வரு கிறார்கள். விரைவில் நிலைமை சீரடையும்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் , “கொளத்தூர், திரு. வி.க.நகர் மற்றும் எழும்பூர் தொகுதிகளில் மிக்ஜாம் புயல் பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டேன். வெள்ளநீர் தேங்கியிருக்கும் நிலையில், மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், உயிரிழப்புகளைத் தடுக்கவும்தான் சில இடங்களில் மின் சாரம் இன்னும் வழங்கப்படவில்லை.

மின் இணைப்புகள் வழங்கும் பணி கள் கவனத்தோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைச்சர்கள், அதிகாரிகள் முதல் கடைநிலைப் பணியாளர்கள் வரை மக்களைப் பாதுகாக்கக் களத்தில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள். விரைவில் நிலைமை சீரடையும்” என்று தெரிவித்துள்ளார்.

# மக்களை வெளியேற்றும் உத்தரவினால் தெற்கு காசாவில் 6 லட்சம் பேர் பாதிப்பு!



தெற்கு காசாவில் ஆறு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றும் உத்தரவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான பாலஸ்தீன ஏதிலிகளுக்கான தலைவர் பிலிப் லஸாரினி தமது எக்ஸ் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்களில் அரைவாசி பேர் ஏற்கனவே தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல், காசாவின் தெற்கு பகுதியில் போரை ஆரம்பித்துள்ள நிலையில், அங்குள்ள பொதுமக்களை வெளியேறுமாறு கடந்த சில தினங்களுக்கு முன்னர் உத்தரவிட்டிருந்தது.

காசாவில் அமைந்துள்ள தங்குமிடங்கள் மற்றும் பாடசாலைகளில் இடம் பெயர்ந்துள்ள மக்களை உடனடியாக வெளியேற்ற இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் முழு சக்தியுடன் செயற்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

இந்நிலையில் எகிப்திற்குள் நுழைவதே பாலஸ்தீனியர்களுக்கு சாத்தியமான வழி என்றும் தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் கடினமானது என்றும் கூறப்படுகின்றது.

கடந்த இரண்டு நாட்களாக ரஃபா எல்லை மூடப்பட்டுள்ள அதேநேரம் முறையான ஆவணங்கள் இருப்பவர்கள் கூட எகிப்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் முதலில் காஸாவின் மத்திய பகுதிக்கும் பின்னர் கான் யூனிஸ்க்கும் தற்போது ரஃபாவிற்கும் இடம்பெயர நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், காசாவில் இராணுவமயமாக்கப்பட்ட பாதுகாப்பு வலையத்தை உருவாக்கும் இஸ்ரேலின் திட்டத்தை துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் வன்மையாக கண்டித்துள்ளார். அத்தகைய யோசனையை விவாதிப்பது கூட பாலஸ்தீனியர்களுக்கு அவமரியாதை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவின் எதிர்காலம் பாலஸ்தீனியர்களின் கைகளில் இருக்க வேண்டும் என்றும் அதன் பாதுகாப்பு ஹமாஸ் இருக்க வேண்டும் என்றும் ரெசெப் தையிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு!





பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணம் பெஷாவர் நகரில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றுக்கு அருகில் குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் திடீரென பாரிய சத்தத்துடனான இந்த குண்டு வெடித்துள்ளது.

இந்த தாக்குதலில் 4 மாணவர்கள் உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்பு படையினரால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலிற்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்காமல் உள்ள பட்சத்தில், இதுகுறித்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 07.12.2023




இன்று உங்களிடம் விரைந்து முடிவெடுக்கும் திறன் காணப்படும். உங்கள் செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் நன்மை அடைவீர்கள்.

உங்கள் தனித்த திறன் உங்கள் செயல்திறனில் வெளிப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் விருப்பமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிக்கு மிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று பணிகள் சமூகமாக நடக்காது. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். தகுந்த பலன்கள் கிடைக்காது. என்றாலும் கட்டுப்பாட்டுடன் சுமூகமாகச் செயல்களை செய்ய வேண்டும் ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் சூழ்நிலை இருக்காது. சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

மன உளைச்சல் காரணமாக இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.




இன்று அதிகமான செயல்கள் காணப்படாது மனக் குழப்பத்தில் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும். அது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று பண வரவு காணப்படாது. முடிந்த அளவு சேமிக்க வேண்டும். என்றாலும் நீங்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரும்.

கண்களில் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் தேவை.




இன்று வளர்ச்சி காணப்படும். இன்று நீங்கள் உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமைகளை பயன்படுத்தி செயலாற்றுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்களின் இந்த நேரடி அணுகுமுறை காரணமாக நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள். புதிய முதலீட்டிற்கான முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.பிரார்தனை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும். கடினமான சூழ்நிலைகளை நம்பிக்கையுடன் சமாளிக்க வேண்டும். தன்னம்பிக்கையை பராமரிக்க முயற்சி செய்க.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். பணிகளை செய்யும் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சண்டைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். நீங்கள் அமைதியாக இருப்பதன் மூலம் எதிர்மறை விளைவுகளை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். பணத்தை கவனமாகப் பராமரிக்க வேண்டும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முன்னேற்றத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். இசை கேட்டல் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்று நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். கணிசமாக பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

சளி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்சிகரமான பலன்கள் கிடைக்காது. எனினும் எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதைக் காண்பீர்கள். இன்று பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். அது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்கள் கையிருப்பை கரைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று குறைந்த அனுகூலமான நாள்.




இன்று நன்மை நடக்கும் நாள். உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். விளையாட்டுப் போக்கில் இன்று உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

பணிகள் அதிகமாக காணப்பட்டலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று உங்கள் பணிகளை நீங்கள் நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சியில் இருவரும் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் நேர்மறையான போக்கு காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.12.2023

## தனுசு

இன்று சிறப்பான நாள். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் நாள். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டராம் விரிவடையும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் செயல் திறன் கண்டு சக பணி யாளர்கள் பொறாமைப்படுவார்கள்பணியில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். உங்கள் அன்பை புரிந்து கொண்டு அவரும் பதில் அன்பு செலுத்துவார்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கூடும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கும்பம்

இன்று உற்சாகமும் ஆற்றலும் குறையும்படியான சூழ்நிலை உருவாகும். குறைந்த எதிர்பார்ப்புடன் உங்கள் செயல்களை ஆற்றினால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாகஇருக்காது. பணிகள் அதிகமாக காணப்படுவதால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் நட்புடன் அணுக வேண்டும். இதனால் நல்லுறவை பராமரிக்க முடியும்.

பயணத்தின்போது பணம் இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

## மகரம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கவனமின்மை காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சக பணியாளர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள்.

தேவையற்ற மனக்குழப்பம் காரணமாக அற்ப விஷயங்களில் உங்கள் துணையிடம் குற்றம் கண்டு பிடிப்பீர்கள்.

பண வரவு சுமாராக இருக்கும். பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்களை உண்பதை தவிர்க்க வேண்டும்.

## மீனம்

இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க உகந்த நாள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி செய்வீர்கள். உங்கள் திறமை மற்றும் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல லாபமும் பண வரவும் காணப்படும்.

உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



